முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் தை மாதம் 15 திகதி முதல்

சுபகிருது வருடம் தை மாதம் 22 திகதி வரை

(29.01.2023 ஞாயிறு முதல் 05.02.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. சரவணச் சுடரேற்றி சற்குருவாய்
   சகலருக்கும் ஞானமருள வந்த
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
   அகத்திய மகரிஷியும் உமைபோற்றி
2. போற்றியே சுபகிருது கலைதிங்கள்
   புகலுவேன் மூவைதிகதி மேல் இருபானீர் திகதி வரை
   உற்றதொரு இந்தியா தமிழகத்தில்
   உரைத்திடுவேன் நடக்கும் வார நிகழ்வாக
3. ஆகவே வருங்கால பலன் குறித்த
   ஆசிதனை அரங்கன் கேட்க உரைப்பேன்
   வகையிலா கலிகாலக் குற்றங்கள்
   வன்கொடுமை கொலைகளவு
4. களவானச் செயல்பாடுகள் எல்லாம்
   கட்டுக்குள் வந்து பாதுகாப்புற
   ஞாலமதில் சட்டங்கள் கடுமையாக்கி
   நடுவணும் தமிழக ஆளுமையும்
5. ஆளுமையும் தண்டனைக்கடுமை
   ஆக்கிய வண்ணம் துரிதகதி
   வலுவானச் செயல்முடிவுகள் தர
   வருமுலகில் குற்றங்கள் பெருகா
6. பெருகா பாதுகாப்பு உண்டாகும்
   பேரளவு பதுக்கல் புரிகின்ற
   வருமுலகில் ஊழல்வாதிகளுக்கும்
   வாஞ்சையிலா தடைமுடை விதித்து
7. விதித்து சட்டங்கள் கடுமைபடவே
   வினவிட இந்திய தமிழக ஆளுமை
   சாதிக்கும் வண்ணம் செயல்பட
   சகலதும் அரசுடமை ஆகி
8. ஆகியே அரசுக்கு ஆளுமைக்கு
   ஆபத்தில்லா எதிர்பார்ப்பு மக்களிடை
   மகிழவே ஆதரவாகப் பெருகி
   மண்ணுலகில் சேவை குன்றா வண்ணம்

9. வண்ணமுடன் இந்தியா தமிழகம்
வளரும் மலரும் சகலவகையும்
எண்ணம் தூய்மைபட பற்று நீக்கியே
எல்லாம் இறைவன் செயலென சேவை

10. சேவை சுயநலமிலா சிறக்க
சேவகர்களாக வந்த ஞானிகளை
அவணியில் வணங்கிப் பின்பற்றிட
ஆளுமைகள் அமைதி பாதுகாப்புத் தரும் ஞானவழியாகும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் தை மாதம் 15ம் நாள் 29.01.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் 22ம் நாள் 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

உலக மக்கள் கடைத்தேறிட உலகினில் சரவண ஜோதி சுடரினை உருவாக்கி சரவண ஜோதி சுடரொளி மூலம் உலக மக்களுக்கு ஞானம் அருளி உலக மக்களை கலியின் பிடியில் இருந்து காத்திடவே முருகப் பெருமானின் ஆற்றலாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா ஞானியே உம்மைப் போற்றியே அகத்திய மகரிஷி யானும் சுபகிருது வருடம் தை மாதம் 15ம் நாள் 29.01.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் 22ம் நாள் 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

வன்கொடுமை, கொலை, களவு என உலகினில் கலிகால குற்றங்கள், செயல்பாடுகள் என எல்லா குற்ற செயல்களையும் கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் வகையில், குற்றங்களை கட்டுப்படுத்தி மக்களை பாதுகாக்கும் வகையில் அரசு சட்டங்களை கடுமையாக இயற்றி தண்டனைகளை கடுமையாக்கியும் விரைந்து செயல்பட்டும் உறுதியான வகையிலே செயல்பட்டு நீதியை நிலைநிறுத்தினால் இனிவரும் காலங்களிலே குற்றங்கள் பெருகாமல் நாட்டினில் பாதுகாப்பு உண்டாகுமப்பா.

பெரிய அளவிலே பொருள்களை பதுக்கி வைத்து ஊழல் புரிகின்ற ஊழல்வாதிகளுக்கு கருணையின்றி தடைகளை விதித்தும் முடக்கியும் வைத்து ஊழல்வாதிகள் தப்பிக்காதவாறு சட்டங்களை கடுமையாக இயற்றியும் அரசு செயல்படுவதுடன் கைப்பற்றிய சொத்துக்களை அரசுடைமை ஆக்கியும் செயல்பட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி நீதியை பரிபாலனம் செய்து நாட்டு மக்களுக்கு மகிழ்வை உண்டாக்கி நேர்மையுடன் நடந்து கொள்ள மக்களின் ஆதரவு அரசிற்கு பெருகி இந்தியா தமிழகம் மக்கள் தொண்டில் சிறந்து விளங்கி சகல விதமான துறைகளிலும் முன்னேற்றம் அடையும். நாட்டு மக்களை ஆட்சி புரிவோரும் நாட்டு மக்களும் சுயநலம் இல்லாமல் செயல்பட செயல்பட எல்லாம் இறைவனது செயல் என சேவை மனப்பான்மையுடன் செயல்படுவதுடன் மக்களுக்கு தொண்டு செய்வதே நோக்கமாக கொண்டு வாழ்ந்து மரணமிலாப் பெருவாழ்வினை பெற்றிட்ட ஆற்றல் மிக்க ஞானிகளை உளமாற ஏற்று வழிபாடுகளை செய்து வரவர ஆட்சி முறை தெளிவாகி அமைதியும் பாதுகாப்பும் மிக்க ஞான ஆட்சி போல அமைந்திடுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–